

# அமெரிக்க மண்ணில் தமிழ்க் கல்வி - புதுக் கண்ணோட்டமும் தமிழர்களின் கட்டாயமும்

(Published in the FETNA Conference Sovenir)

வாசு அரங்கநாதன்
தெற்காசியத் துறை, பென்சில்வேனியாப் பல்கலைக் கழகம்

தமிழ்க் கல்வி முறைக்குப் பொதுவாகப் புதிய கண்ணோட்டம் தேவை எனும் பொதுவான எண்ணம் இருக்கும் இக்காலக்கட்டத்தில் அமெரிக்க மண்ணில் தமிழ்க் கல்விமுறையை ஏற்படுத்துவது எப்படி என்பது பற்றிய எண்ணத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். இதற்கு முக்கியக் காரணம் எந்தக் காலக்கட்டத்திலும் இல்லாமல் இந்நூற்றாண்டில் மிகவும் அதிகமான தமிழர்கள் அமெரிக்காவில் தொடர்ந்து வாழத்தொடங்கிவிட்டார்கள். அதோடு தமிழகத்திலிருந்து பல குடும்பங்கள் இம்மண்ணுக்குத் தொடர்ந்து வருகிற நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இச்சூழலில் இம்மண்ணில் தமிழ் மாணாக்கர்களுக்குத் தமிழ்ப் புகட்டுவது எங்ஙனம் மற்றும் இரண்டாம் தலைமுறைத் தமிழர்கள் வழித் தமிழ் தொடர்ந்து இங்கு வளர்வது எங்ஙனம் என்கிற கேள்விகளுக்கு விடை காணவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகிறோம். தமிழ்ப் பள்ளிகள் பல நடத்தியும் தமிழ்

நிகழ்ச்சிகள் பல நடத்தியும் தமிழ்ப் பண்பாட்டையும் தமிழ் மொழியையும் இளைய தலைமுறையினரிடையே தக்கவைக்கப் பலரும் அயராது உழைத்து வருகின்றனர். அவர்களின் முயற்சியை நாம் பாராட்டவேண்டும். அவர்களின் அம்முயற்சி தொடர்ந்து வளர அமெரிக்க மண்ணில் வாழும் தமிழர்கள் ஒவ்வொருவரும் முழுமூச்சாகக் கை கொடுக்கவேண்டும். நாம் அமெரிக்க மண்ணில் பார்க்கும் தமிழர் ஒவ்வொருவரும் அவர்களுடைய சந்ததியினர் ஒவ்வொருவரும் தமிழைச் சரளமாகப் பேசவேண்டும். தமிழ் இலக்கியங்கள் பற்றிய நல்லறிவு அவர்களிடையே இருக்கவேண்டும் என்று விரும்புகிறோம். அப்படி நடந்தால் அதுவே தமிழ் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக இருக்கும்.

அமெரிக்க மண்ணில் இரு மொழிப் புலமைத் தேவை எனும் நிலையை உணர்ந்து அமெரிக்க அரசு பல முயற்சிகளை எடுத்து வருகிறது. தேசீய அயலக மொழிகள் நிறுவனம் (NFLC - http://www.nflc.umd.edu/) எனும் நிறுவனத்தை அமைத்து இதற்கான மையங்களை அமெரிக்காவில் மேரிலாந்து, மிச்சிகன், ஹாவாய் போன்ற பல இடங்களில் ஏற்படுத்தி அமெரிக்க மாணவர்கள் ஆங்கிலம் மட்டுமல்லாது மற்ற மொழிகளிலும் புலமை பெறுவதற்கான பல ஏற்பாடுகளைச் செய்து வருகிறது அமெரிக்க அரசு. இம்மையங்களில் மொழிப் புலமைக்கான தரத்தை ஏற்படுத்திய அயலக மொழிகளுக்கான மையத்தோடு (ACTFL – www.actfl.org) இணைந்து மொழிகளுக்கான பல பாடத்திட்டங்களை ஏற்படுத்தி வருகின்றனர். இந்நிறுவனங்களில் தமிழ் மொழிக்கு இன்னும் முழு அங்கீகாரம் கொடுக்கவில்லையெனிலும் நம் தமிழ்ப் பள்ளிகளின் முயற்சிகள் பற்றிய விவரங்களைக் கூறித் தமிழுக்கும் சில சலுகைகள் தரவேண்டும் எனக் கேட்டால் அவர்கள் அச்சலுகைகளைக் கொடுக்க முன்வருகிறார்கள். இத்தகைய சலுகைகளில் ஒன்றுதான் இருமொழிப் புலமைக்கான முத்திரை (Biliteracy Seal). உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் தங்களின் இரண்டாம் மொழியின் திறனைக் காட்டி இத்தகைய முத்திரையைப் பள்ளி நிர்வாகத்தினின்று பெற வாய்ப்புகள் இருக்கின்றன. சமீபத்தில் மின்னசோடா கல்வி மையத்துக்குட்பட்ட பள்ளிகளினின்று இரண்டு தமிழ் மாணவர்கள் இத்தகைய முத்திரையைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இம்முயற்சியை மற்ற மாநிலங்களிலும் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் தமிழ் மாணவர்கள் பெறுவதற்கான

வழிவகைகளைக் காணவேண்டும். இது பற்றிய விவரங்களுக்குக் காண்க http://sealofbiliteracy.org/.

அமெரிக்க மண்ணில் தமிழ்ப் பள்ளிகள் பெருகிய நிலையிலும் தமிழ் மாணாக்கர்களின் எண்ணிக்கைப் பெருகி வரும் நிலையிலும் அவர்களின் தமிழறிவு அவர்களுக்கு எவ்வகையில் அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு இம்மண்ணில் பயன்படும் என்பதை நாம் ஊர்ந்து நோக்கவேண்டும். பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தின் உலகப் புகழ்பெற்ற வார்ட்டன் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் அனைவரும் இரண்டுவருட மொழியறிவு பெறவேண்டும் எனும் கட்டாயம் இருக்கிறது. இவ்வாறே பொறியியல் மாணவர்கள் மற்றும் பல மாணவர்களுக்கும் இவ்வகைக் கட்டாயம் இருக்கிறது. இத்தகைய இரண்டாம் மொழியறிவின் கட்டாயத் தேவை அமெரிக்காவில் பல பல்கலைக் கழகங்களிலும் இருக்கிறது. இப்பள்ளிகளில் படிக்கும் தமிழ் மாணாக்கர்கள் தங்களின் தமிழறிவைப் பயன்படுத்தாமல் பிரஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ் போன்ற மொழிகளைப் படிக்கும் சூழலையும் காண்கிறோம். தமிழ் வகுப்புகள் தொடர்ந்து நடந்து வரும் பென்சில்வேனியாப் பலகலைக் கழகத்தில் ஆகட்டும் சிகாகோ பல்கலைக்கழகத்திலாகட்டும் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்திலாகட்டும் கலிபோர்னியா பெர்க்லிப் பலகலைக்கழகத்திலாகட்டும் டெக்ஸாஸ் ஆஸ்டின் பல்கலைக்கழகத்தில் ஆகட்டும் இப்பல்கலைக் கழகங்களில் படிக்கும் தமிழ் மாணவர்கள் தமிழைப் புறக்கணித்து வேறு மொழிகளைப் படிக்க நம் மனம் விட்டுக்கொடுக்குமா? இவர்கள் இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளத் தமிழ் அமெரிக்கர்களாகிய நாம் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கவேண்டும். அத்தோடு சமூகப் பள்ளிகளில் தமிழ் கற்றால் அவ்வறிவைப் பற்றிப் பல்கலைக் கழகங்களில் கூறி அவர்கள் வேறு எந்த மொழியையும் படிக்கவேண்டாம் எனும் நிலையையும் பெறலாம். கட்டாயமாக இரண்டு வருடம் ஆங்கிலம் அல்லாத ஒரு மொழியைப் படிக்கவேண்டும் என்ற ஒரு தேவை தமிழ் அமெரிக்க மாணவர்களுக்கு ஏற்படும் போது அவர்கள் தமிழ் மொழியறிவைப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பை விட்டுவிடக் கூடாது. பென்சில்வேனியாப் பலகலைக்கழகத்தின் மொழிகள் மையத்தில் இத்தகைய மாணாக்கர்களின் தமிழறிவைக் கண்டுகொண்டு அவர்களுக்கு இரண்டு வருட மொழியறிவு கொண்டமைக்கான தகுதிச்

சான்றிதழை வழங்குகிறது. இச்சான்றிதழை அவர்கள் கல்லூரியில் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பிருக்கிறது. இவ்வரிய வாய்ப்பை நம் தமிழ் மாணாக்கர்கள் அவர்கள் செல்லும் கல்லூரியில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். "வண்ணம் நோக்கியும் மென் மொழி கூறியும் நம்மொடு நம் மொழி நவில்வோம்". தமிழ் மொழியோடு தெற்காசியத் துறைகள் இருக்கும் பல்கலைக் கழகங்களில் தமிழக அரசியல், பண்பாடு, வரலாறு, நாட்டுப்புறவியல், இசை போன்றவை பற்றிய கல்வியறிவு பெறவும் மற்றும் அது பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடவும் இங்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. திருமாவளவனின் அரசியல், சினிமா வழி தமிழர்களிடையே வளர்ந்து வரும் கலாச்சாரம், மேள வாத்தியத்தின் வளர்ச்சி, தமிழர்களிடையே கண் வைப்பது பற்றிய கருத்து போன்ற பல கருத்துகளிலும் இன்னும் பல கருத்துகளிலும் இப்பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிகள் பல செய்துள்ளார்கள் மற்றும் தொடர்ந்து செய்துவருகின்றனர். இத்தகையக் கல்வியைப் பல்கலைக் கழகங்களில் பயிலும் தமிழ் மாணவர்கள் தவறாது பயன்படுத்திக்கொள்வது இம்மண்ணில் தமிழ் மற்றும் தமிழ்ப் பண்பாடு வளர வழிவகுக்கும்.

This essay intends to outline all of the opportunities available in this country for second generation Tamil students to make use of their knowledge of Tamil for their success in colleges. Many colleges in the US require that their students get at least two years of second language proficiency as part of their undergraduate curriculum. When any of the second generation Tamil students get a skill in Tamil literacy from community schools or from their own families, they should make it a point that their knowledge is used to waive the above requirement in the US colleges. The University of Pennsylvania's Penn Language Center does let Non-Penn and Penn students take proficiency tests to prove their skill in any language. This will indeed save both money and their precious time while attempting to major in science or other disciplines of their choice. Students who have enough proficiency in the Tamil language can make use of this opportunity, so their success in colleges can be made much easier.

Those who are interested in getting a proficiency certificate in Tamil may have a look at the URL: http://plc.sas.upenn.edu/languageproficiencytesting.
Let us make use of the knowledge of Tamil that we obtain from community schools toward achieving our goals at colleges in the US. Let Tamil be part of our entire life and let it work for our success in this land as much as possible.

The National Foreign Language Center (NFLC), American Council for Testing of Foreign Languages (ACTFL), Efforts on Biliteracy programs (http://sealofbiliteracy.org/), Heritage Languages in America (http://www.cal.org/heritage/research/faqs.html) are some of the organizations and centers that thrive to promote fluency among students in a foreign language. The Second Generation Tamils as well as their parents along with the Tamil educators in this country should take all efforts to promote the knowledge of Tamil among Tamil students. So, their biliteracy skills can duly be recognized in the educational institutions of America.